24th January 1970]

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ரூ. 15,61,401·98.

(இ) ரூ. 48,097·83.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 15 லட்சம் ரூபாய் அளவில் வருமானம் வந்திருக்கும்போது, ரூ. 48 ஆயிரம் அளவில்தான் கொடுத்திருக்கிறோம். எவ்வளவு மனுக்கள் வந்தன ? அவற்றில் எவ்வளவு கொடுக்கப்பட்டன ? எவ்வளவுக்கு கொடுக்கப்படாமல் இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மொத்தம் ரூ. 15,61,401·97 இதில் சேர்ந்திருக்கிறது. 1967–68-ல் 640 மனுக்கள் வந்தன. அதில் ஆராயப்பட்டு தகுதியுடையனவாக வந்திருப்பது 436. அவற்றில் 269 பேருக்கு அளிக்கப்படுகிறது. மற்றவை பரிசீலிக்கப்பட வேண்டும். இதுவரையில் மொத்தம் 1967–68, 1968–69-ல 1969 செப்டம்பர் முடிய இந்த ஆண்டு வரையில் ரூ. 1,30,017·64 அளிக்கப்பட்டிருக்கிறது. மற்றவை விரைவில் குழுவினால் ஆராயப்பட்டு விரைவில் அளிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது.

Rajah's High School, Sivaganga.

*53 *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that there is faction among the students of Rajah's High School, Sivaganga as a result of faction among the teachers themselves and as a result of this, disputes have arisen ; and

(*b*) if so, the action taken thereon ?

சிவகங்கை அரசர் உயர்நிலைப்பள்ளி.

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிவகங்கை அரசர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குள் தகராறு உள்ள காரணத்தால் பள்ளி மாணவர்கள் இரு பிரிவாகப் பிரிந்து தகராறுகள் ஏற்படுவதை இந்த அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) சிவகங்கை அரசர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குள் தகராறு எதும் கிடையாது. மாணவர்களுக்குள்ளும் இரு பிரிவுகள் ஏற்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Tamil Nadu Raffle Scheme.

*54 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that the prize amounts under Tamil Nadu Raffle Scheme were taken by the Government because they were not claimed by the prize winners ; and

(*b*) the total amount of these prizes ?

தமிழக அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழக அரசுப் பரிசுச் சீட்டு திட்டத்தில் சில பரிசுகளுக்கு பரிசுத் தொகைகளை கோரிப் பெறாத காரணத்தால் அத்தொகைகள் அரசுக்குச் சேர்ந்துவிட்டன என்பது உண்மையா ?